## ஜனவரி - 27

**"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்; அதினிடத்தினின்று ஜீவ ஊற்றுப் புறப்படும். - நீதி 4:23.**

பாவம் எல்லா விதங்களிலும் வரும். அது எந்த ரூபத்தில் வந்தாலும் அது பாவம்தான். அதனை நாம் பாவம் என்று ஒப்புக்கொண்டால் மாத்திரம் போதாது. பாவத்திற்கு எதிர்த்துப் போராட நாம் உறுதி கொள்ள வேண்டும். ஏனெனில் நமதாண்டவர் பாவத்தை நெருங்க அனுமதிப்பதில்லை. பாவத்தை நம் இருதயங்களிலிருந்து முற்றிலுமாக வேரோடு அகற்றிட வேண்டும். நம் கர்த்தரால் பரிபூரணமாக ஏற்றுக் கொள்ளப்படாத எதுவும் நம் இருதயங்களில் இடம் பெறலாகாது. அதைப்பற்றிய வாஞ்சையோ விருப்பமோ நம்மில் இருக்கலாகாது. எப்படியெனில் நமது இருதயம் எத்தனை விதங்களில் சுத்தம் செய்ய வேண்டி வரும். நமது வாழ்க்கை சுத்தமாகும். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற நம்மில் குறிப்பாக எண்ணங்களும் எத்தனை விதங்களில் மாறுதல் அடையும். இதனைக் கவனத்திற்குக் கொண்டுவரத் தவறுபவர்கள் தொடர்ந்து பாவச் சோதனைகளுக்கு ஆளாவார்கள். ஏனெனில் அவர்கள் வெளியரங்கமாக பல தவறான காரியங்களைத் தவிர்த்தாலும், அவர்கள் ரகசியமாக தங்கள் அந்தரங்கத்தில் வேண்டாத காரியங்கள் தகாதது என ஒதுக்கப்பட்டிருந்தாலும், இவைகள் ஒதுக்கப்படாமல் இருந்தால் நமக்குக் கிடைத்திருக்குமே என அங்கலாய்ப்பவர்களும் உண்டு. **- Z ’99, 140 (R 2479).**

நம்முடைய இருதயங்கள் மிக ஜாக்கிரதையோடு காவல் செய்யப்பட வேண்டும். இருதயத்தின் உள் வருபவைகளும் அவற்றிலிருந்து வெளி வருபவைகளும் ஜாக்கிரதையோடு காவல் செய்யப்பட வேண்டும். நம் இதயத்திற்குள் பொல்லாங்கு பிரவேசியாதபடிக்கு நாம் அதிக ஜாக்கிரதையோடு இருத்தல் வேண்டும். தீமை நம் இதயத்திற்குள் வராதபடி பார்த்தல் வேண்டும். தீமைக்குப் பகரம் நம் இருதயத்தை நன்மையால் நிரப்புதல் வேண்டும். அப்படிச் செய்யும்போது நமது வாழ்க்கையில் நன்மை பிறக்கும். தீமை வருவது கிடையாது. ஒருவன் தன் இருதயத்தில் எவ்வாறு சிந்திக்கிறானோ அவ்வாறே அவனும் இருப்பான். நம்முடைய பண்புகள் அப்படித்தான் தோன்றுகிறது அந்தப்படிதான் நம் எதிர்காலங்களும் தீர்மானிக்கப்படுகின்றது. **- P ’26, 190.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

உபா 5:29; 6:5,6; நாளா 28:9; 2நாளா 12:14; சங் 22:26; 31:10; 57:7; நீதி 14:30; 16:1; எரே 17:9,10; மத் 5:8; 9:4; 15:18,19; ரோம 2:5; 10:8; எபி 3:8;4:12.

**கோபுர வாசிப்பு :** Z ’11, 396 (R 4904).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் என் இருதயத்தைக் கவனத்துடன் காத்துக் கொண்டேனா? அதில் அனுகூலமாக அல்லது பிரதிகூலமாக இருந்தவை எவை? அதன் பலன் என்ன?